
www.padippakam.com

சமூக விஞ்ஞான பயிலகத்தின் தத்துவ அரசியல் ஏடு

# கருத்துப் பகிர்வு

இதழ் – 6

ஏப்ரல் –99
மே.99



**ஏப்ரல் 22 தோழர் லெனின் பிறந்த தினம்**

தனிச்சுற்று இதழ்

பங்களிப்பு ரூ 8.00

படிப்பகம்

www.padippakam.com

## தலையங்கம்

**பயிலுவோம் . பயிற்றுவிப்போம் . தலைமைக்குயர்த்துவோம் .**
**மக்கள் மீது தலைமையை நிறுவாதீர்கள்! தலைமைக்குயர்த்துங்கள் !**

தோழர்களுக்கு வணக்கம்!

*ஏறக்குறைய 1 வருட இடைவெளிக்குப்பிறகு மீண்டும் பகிர்வின் மூலமாக உங்களைச் சந்திக்கின்றோம். இடைப்பட்ட காலத்தில் புதிய தடம் (சமூகவிஞ்ஞான) பயிலகத்தின் கடமையைச் செய்தது. பயிலகத்தின் வளர்ச்சியை ஒட்டி தற்போது வேலையைப் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் புதியதடம் பயிலகத்தின் கலை இலக்கிய இதழாகவும், பகிர்வு தத்துவ அரசியல் இதழாகவும் இனி தொடர்ந்து வெளிவரும். சமூக அக்கறை கொண்ட சிற்றிதழ்களுக்கே உண்டான நிதிநெருக்கடிதான் பகிர்வின் தொடர் வெளியீட்டிற்கும் தடையேற்படுத்தியது. இதனைத் தோழர்களது பங்களிப்பின் மூலமாக மட்டுமே நிவர்த்தி செய்யமுடியும். தோழர்கள் தங்களது பங்களிப்பின் வாயிலாக பகிர்வின் வளர்ச்சியை உறுதி செய்வார்கள் என நம்புகிறோம். நிற்க.*

*இன்று நாம் மோசமான பல அரசியல் நிகழ்ச்சிகளை அன்றாடம் சந்தித்துக் கொண்டுள்ளோம். ஆனால் அவை எல்லாம் பத்தோடு பதினொன்றாக கவனிப்பாரற்று விடப்படுகின்றன. இடதுசாரிகள் என்று சொல்லப்படுகிறவர்களால். அல்லது அவற்றிற்கு எதிராக வழக்கமானதும் சடங்குத்தனமானதுமான எதிர்வினையுடன் தங்களையும் சுருக்கிக் கொள்கின்றனர் மாறாக நிகழ்வுகளின் அரசியல் உள்ளடக்கம் பற்றி கேள்வி எழுப்பி மக்களது சுயசிந்தனையில் வளர்ச்சியை ஏற்படுத்த தயாராயில்லை.*

*உதாரணமாக சமீபத்திய பீகார் படுகொலை, கன்னியாஸ்திரிகள் கற்பழிப்பு, ஒரிசா பாதிரியார் படுகொலை தமிழகத்தில் தனி நீதிமன்ற வழக்குகள் மாற்றப்பட்டது தொடர்பாக அரசியல் கட்சிகள் முன்வைத்த கருத்துக்கள் போன்றவற்றைக் கூறலாம்.*

*தலித்துகள் கூலி ஏழை விவசாயிகள் தங்களது விடுதலைக்கு ஏற்ற அரசியல் கட்சியை தாங்களே தேர்வுசெய்து அதன் ஆதரவாளர்களாக செயல்படுவதை அங்கீகரிக்கமுடியாத*


படிப்பகம்

www.padippakam.com

பண்ணையாளர்களின் அப்பட்டமான வெறிச் செயலை, தலித்து கூலி ஏழை விவசாயிகள் எவ்வித உரிமையும் இன்றி, மனிதர்களாக நடத்தப்படாததை சுட்டிகாட்டி இதன் பெயர்தான் சனநாயகமா என்று கேள்வி எழுப்பி இன்று போற்றப்படுகின்ற இந்திய சனநாயகத்தின் முகமூடியை கிழித்தெறியாமல் படுகொலைக்கான காரணத்தை தங்களது ஓட்டுப் பொறுக்கும் அரசியலுக்குள் முடக்கி ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொள்கின்றனர்.

தலித்துகள், மதச்சிறுபான்மையினர், தேசிய விடுதலைப் போராளிகள், புரட்சியாளர்கள், பெண்கள் ஒடுக்குமுறைக்குள்ளாவது நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. இதனைஒட்டி தங்களை சனநாயகத்தின் பாதுகாவலர்களாக காட்டிக் கொள்ள முற்படுபவர்கள், ஆட்சியிருப்பவர் மீது குற்றத்தை சுமத்தி ஆட்சியை கலைக்கும்படி கோரிக்கை விடுகின்றனர். இந்தக் கோரிக்கைக்குப் பின்னால் இவர்கள் ஆட்சிக்கு வரவேண்டும் என்ற பதவி வெறி வெளிப்படுகிறதே தவிர சமுக நலனின் அக்கறையல்ல.

ஆட்சிக் கலைப்பதற்காகவும், ஆட்சியை காத்துக்கொள்ளவும், இவர்கள் அம்பலப்படுத்தும் ஒவ்வொருவர் மீதான குற்றங்கள் இவர்கள் அனைவரும் மக்கள் விரேதிகள் - சன நாயகத்தின் பகைவர்களே என்பதை தோலுரித்துக்காட்[redacted]டுகிறது.

உதாரனமாக ஜெயலலிதா மீதான குற்றங்களை விசாரிக்க கருணாநிதி அரசு அமைத்த தனி நீதிமன்றம் கருணாநிதி விருப்பத்திற்கேற்ப ஜெயலலிதாவைத் தண்டித்துவிடும் என்று பா.ஜ.க, அ.தி.மு.க கூறுவதும். இதற்கெதிரான பா.ஜ.க மாற்றியமைத்துள்ள சிறப்பு நீதி மன்றங்கள் ஜெயலலிதாவை காப்பாற்றும் B.J.Pயின் தலைமையின் விருப்பத்தை செயற்படுத்தக்கூடியது என்று கருணாநிதி மற்றும் ஐக்கியமுன்னனியினரும் கூறுவார்கள் கூறலாம்.

அரசியல் கட்சித்தலைவர் மட்டுமல்ல பத்திரிக்கைகளும் தங்களது சார்புதன்மைகேற்ப இதில் ஏதோ ஒரு பக்கத்தை சார்ந்து நின்று மக்களிடம் தங்களது கருத்தை பிரச்சாரம் செய்து ஒருபக்கமாக இழுக்கின்றனர்.

இவர்களது குற்றச்சாட்டுகளில், இவர்கள் ஒரு உண்மையை போட்டுடைக்கிறார்கள், இவர்கள் இது வரைப் போற்றிவந்துள்ள சனநாயகத்தின் தூண்களில் ஒன்றான நீதி மன்றமும், அங்கு நீதி வழங்கும் நீதி மான்களும் ஆட்சியாளர்களின் கை பாவைகளே என்று கூறுகிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

இந்த நீதி மன்ற அவமதிப்பு ( நடு நிலை முக மூடி கிழிப்பு) களைக் கேட்டுக்கொண்டு நீதி தேவன்களான நீதிபதிகளும் இதைக்கண்டும் காணாதவர்கள் போல ( நடித்து) பேசா மடந்தைகளாக இருக்கின்றனர்.

இவ்வாறு நடைமுறை எதார்த்தங்களின் மூலமாக அன்றாடம் வெளிபபடும 'அம்பலங்களில் ' இருந்தே, அதைக்கோள்வி எழுப்புவதன் மூலமாகவே மக்களின் சிந்தையில் ஏற்றிவைக்கப்பட்டுள்ள இந்திய சனநாயகம் பற்றிய புனிதத்துவத்தை உடைத்து உண்மையான சனநாயகத்திற்கும் நடைமுறையில் உள்ள ஏமாற்று சனநாயகத்திற்கும் (சனநாயகமற்ற சர்வாதிகாரத்திற்கும்) இடையில் உள்ள வேறுபாட்டை சுட்டிக்காட்டி உண்மையான சனநாயகத்தின் வளர்ச்சிக்கு உதவும் கடமையை சமூக விஞ்ஞானப் பயிலகம் செய்யும்.

இக்கடமையை இலக்கியதளத்தில், தத்துவ, அரசியல் தளத்தில் புதியஜத்தியும், பகிர்விலும் மேற்கொண்டு, தாங்கள் சொல்பவற்றை ஏற்றுக் கொண்டு பின் வருபவர்களாக மக்களை மாற்றும் தலைமையை நிறுவும் அரசியல் போக்கிற்கு எதிராகப் போராடி மக்களது சுய அரசியல் வளர்ச்சி மற்றும் முன்முயற்சிக்கு உழைத்து சனநாயகத்தின் வளர்ச்சியை உத்திரவாதப்படுத்தும் இன்றைய வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற அனைத்து சனநாயசக்திகளையும் பயிலகம் அறை கூவி அழைக்கிறது. வாருங்கள் தோழர்களே! பயிலுவோம்! பயிற்றுவிப்போம்! தலைமைக்குயர்த்துவோம்!!—தோழமையுள்ள பகிர்வு. சமூக விஞ்ஞன பயிலகம் தமிழ்நாடு.

## மொழி - சில சிந்தனைகள்

— குமார்.

மனிதன் தன் உணர்வுகளை பிறருடன் பகிர்ந்து கொள்ள உதவும் ஒரு ஊடகம் (அ) கருவியே மொழி. ஆதி சமூக மனிதன், தன் உணவுத்தேவைக்காக [redacted] மிருகத்தை பிடித்து உண்ணும்போது ஏற்பட்ட சந்தோசத்தை பிறருடன் பகிர்ந்து கொள்ளும்போது ஏற்படுத்திய அர்த்தங்கலந்த ஒளி, பின்னாளில் தேவை கருதி மொழியாக வளர்ச்சி பெற்றது. உதாரணமாக நரியைப்போல ஊளையிடுவதன் மூலமாக நரியின் வருகையை பிறருக்கு உணர்த்துவது.



படிப்பகம்

www.padippakam.com

மனிதனுடைய ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்புகளின்போதும், புதிய உற்பத்தியின்போதும் தேவை கருதி மொழியும் சேர்ந்தே வளர்ந்தது. இதில் திராவிட இனக்குழு மக்கள் பேசிய மொழி தமிழ் மொழி என்றழைக்கப்பட்டது. நம் நாட்டில் ஏற்பட்ட மாற்றம், அரசியல் சூழ்நிலைகள் காரணமாக தமிழ்நாட்டில் உள்ள மக்கள் பேசும் தமிழ் மொழியும், பிறமொழிக் கலப்பு ஏற்பட்டு, சிதைந்து தன் சுயம் இழந்து நிற்கிறது.

ஏனெனில் நம்மை ஆண்டவர்கள் ஒரே மொழி பேசும் மன்னர்கள் அல்லர். மராட்டிய மொழிபேசும் மராட்டிய மன்னர்கள், கன்னட மொழி பேசும் நாயக்கர்கள், போன்ற வேற்று மொழிபேசும் மன்னர்களே இப்பகுதியை ஆண்டார்கள்.

எந்த மன்னனின் ஆட்சி அதிகாரம் இங்கு நிலவியதோ அந்த மன்னனின் அவனது மொழிபேசும் பகுதியைச் சேர்ந்த மக்கள் இங்கு குடியேற்றம் செய்யப்பட்டார்கள். அவர்களின் மொழியும், இங்குள்ள தமிழும் கலந்து தமிழ்மொழிச் சிதைவுக்கு வழி ஏற்படுத்தப்பட்டது. ஆட்சி அதிகாரத்தில் உள்ள மணிமகுடம் தரித்த மன்னர்கள், மந்திரிகள், மற்றும் ஏனையோரின் தமிழ் மொழி ஒருவிதமாகவும், (உதாரணம் - இலக்கண, இலக்கியத் தமிழ்) சாதாரண மக்கள் பேசும் தமிழ் மொழி ஒரு விதமாகவும் இருந்தது. அடுத்து நம்மை ஆங்கிலேயர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், போர்த்துகீசியர்கள் போன்றவர்கள் ஆட்சி செய்தபோது அவர்களின் மொழி இங்கு ஆதிக்கம் செலுத்தியது.

னர்களோ,

ஆதிக்கத்தின் கீழ் மக்கள் எவ்வாறு அடிமைப்படுத்தப்பட்ட[redacted] அவ்விதமே அவர்களின் மொழியும் அடிமைப்பட்டது. அதாவது ஒருபுறம் மக்கள் பேசும் மொழி ஆட்சியதிகாரத்தில் [redacted] இல்லை. மறுபுறம் வேற்று மொழி ஆட்சியதிகாரத்தில் ஆதிக்கம் செலுத்தியது. ஆக, வளர்ச்சிக்கு வழியின்றித் திணறிய தமிழ் மொழி, ஆதிக்க மொழிகளை எதிர்த்துப் போரிடாமல் திணறிய தமிழ்மொழி ஒரு புது வடிவம் பெற்று நிற்கிறது.

www.padippakam.com

தந்தை பெரியார் முதல் டாக்டர் ராமதாஸ் வரை இந்தியை எதிர்ப்பதும், ஆங்கிலத்தை ஆதரிப்பதுமாக தொடங்கி, பெயர்பலகைகளில் இந்தியை மட்டும் தார்பூசி அழி[redacted]த்துவிட்டு, ஆங்கில மொழியின் மீதான தன் எஜமான விசுவாசத்தைக்காட்டிக் கொண்டார்கள்.

எனவே, ஆதிக்கத்திற்க்கெதிரான போராட்டமாக அது அமையவில்லை. பிழைப்புக்காக நடத்தப்பட்டதால் போராட்டவடிவமும் சிதைக்கப்பட்டது. அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் எவ்வாறு கேவலப்படுத்தப்பட்டனரோ அதுபோல அவர்கள் பேசும் மொழியும் கேவலப்படுத்தப்பட்டது. இதற்கு தமிழும் விதிவிலக்கல்ல.

இதை நாம் கல்விக்கூடங்களில் கண்கூடாகப் பார்க்கலாம். தமிழாசிரியரை என்ன பாடுபடுத்துகிறார்கள் பாருங்கள். (இந்தக் கல்வி முறை யாருக்கானது?[redacted] யாருடைய நலனுக்கானது என்ப[redacted]து இக்கட்டுரைக்குத் தொடர்பானவை அல்ல[redacted]) தமிழ் மக்களில் எப்படி வர்க்க வேறுபாடு இருக்கிறதோ, அதுபோல அவர்கள் பேசும் தமிழிலும் வேறுபாடுகள் இருக்கின்றன. மேல்தட்டு மக்கள், நடுத்தரமக்கள், அடித்தள மக்கள் என்று ஒவ்வொரு தளத்திலும் பேசப்படும் தமிழில் வேறுபாடு இருக்கிறது. அதேசமயம் மத்தியில் ஆளும் பி.ஜே.பி. இந்தியின் ஆதிக்கத்தை இந்தியா நெடுகிலும் நிறுவ முயன்று வருகிறது.

ஏனெனில் ஹிந்தி அனைத்து மக்களும் பேசும் மொழியாகிவிட்டால் ஆதிக்கத்துக்கெதிரான மக்கள் போராட்டங்களை மீடியாக்கள் மூலம் பிரச்சாரங்களைக் கட்டமைப்பதன் வாயிலாக எளிதாக முறியடித்துவிடமுடியும். இதன் மூலம் ஆளும் வர்க்கத்திற்கும் அதற்குசேவை செய்யும், பா.ஜ.க அரசுக்கும் லாபம்.

எனவே ஆதிக்கத்திலிருந்து மக்கள் விடுதலையாகும் போதுதான் அவர்களின் மொழியும் விடுதலையடையும். பிறகு அச்சமூகத்தில் உற்பத்தி பெருகும்போது மொழியும் இணைந்து[redacted]. வளரும்.


படிப்பகம்

www.padippakam.com

-சரத் டேனியல்.

**எதிர்வினை :**

## மொழிச்சிந்தனை மீதான பரிசீலனை.

இக்கட்டுரை வாசிப்பு, அதிகமான கேள்விகளை நம்முள் எழுப்புகிறது என்பதால் வாய்ப்பளித்த திரு. குமாரைப் பாராட்டலாம். அவ்வாறு நம்முள் எழும் கேள்விகளையும், எதிர்சிந்தனைகளையும் [redacted] வாசகத் தோழர்களுடன் பகிர்ந்து கொள்வதே இங்கு நமது நோக்கம்.

இவ் எதிர்வினையில் கட்டுரை வடிவம் தொடர்பான துண்டு துண்டாக கருத்துக்களைச் சொல்லும் பலகீனம் பற்றியோ அல்லது மொழிவரலாற்று குறைவறிவு பற்றியோ விவரிக்கப்போதில்லை. அவை காலப்போக்கில் கட்டுரையாளரின் முன்முயற்சியின் மூலமாக நிவர்த்தி செய்யப்படலாம்.

ஆனால் இங்கு, அவர் முன்வைத்துள்ள, சமூக விஞ்ஞானப்பார்வைக்கு விரோதமான எந்திரவியல் பார்வை கொண்ட கருத்துக்களைச் சுட்டிக்காட்டுவது நமது கடமை என நினைக்கின்றோம்.

இக்கட்டுரையைப்படிப்பவர்களுக்கு இயல்பாகவே எழும் பல்வேறு கேள்விகளுள் குறிப்பானவையாக கீழ்கண்டவற்றைக் கூறலாம்.

1) தொடர்ந்து தமிழினம் பிற இனத்தவரால் (கன்னட,மராட்டிய,டச்சு,பிரெஞ்சு,ஆங்கிலேய) ஆதிக்கம் செலுத்தப்பட்டுவந்துள்ளதாகக் கூறப்படுகிறதே. ஏன் இவ்வாறு அடிமைப்படுத்தப்பட்டார்கள்?

அ) இவர்கள் பிற இனத்தவரை அடிமைப்படுத்தியதே இல்லையா?

2) கேள்வி 1-ல் கன்னட, மராட்டிய, பிரெஞ்சு, டச்சு, ஆங்கிலேய என்று எல்லோரையும் ஒன்றாகப் பார்க்கும் பார்வை முன் வைக்கப்படுகிறதே ஆங்கிலேயர்கள், பிரெஞ்சு, டச்சு காரர்களுடைய வர்க்க நிலையும் நம்மை - அடிமை கொண்டதற்கும் தேவை ஒன்றுதானா? அவ்வாறானால் விளைவுகளும் ஒன்றுதானா?.

- அவர்கள் அடிமைப்படுத்தியதற்கும் கன்னடர் மராட்டியர், தெலுங்கர் நம்மை -

படிப்பகம்

www.padippakam.com

இவ்விரு கேள்விகளுக்கும் விடைகாண்பதென்பதே இக்கட்டுரையின் சாரத்தைப் புரிந்துகொள்ள போதுமானதென்பதால் இத்துடன் கேள்வி எழுப்புவதை நிறுத்திக் கொள்வோம்.

நமது மேற்கண்ட கேள்விகளுக்கெல்லாம் இக்கட்டுரையில் பதில் இல்லை. ஏனெனில் இக்கட்டுரையாளர் வரலாற்றை சமூக விஞ்ஞானப்பார்வையின் வழியில் பார்க்காததேயாகும்.

அவர் எடுத்துக்கொண்டுள்ள பிரச்சனை தமிழ் மொழி வளர்ச்சி பற்றியது. அது வளர்ச்சிக்கு வழியின்றி அடிமைப்பட்டுள்ளது. காரணம் கன்னடர் துவங்கி ஆங்கிலேயர் வழியாக இன்று பி.ஜே.பி வரை நம்மை அடிமையாக வைத்திருப்பதே. தீர்வு தமிழ் மக்கள் விடுதலை.

இது ஒரு 'மொட்டையான' உண்மை. மேலும் இது எல்லோரும் இன்று கூறுவதே. தமிழ் வளர்ச்சியின்றி இருக்கிறது. வளர்க்க வேண்டும் வழி என்ன? என்று அரசியல் கட்சிகளும், அறிவு ஜீவிகளும் விவாதம் செய்து கொண்டுள்ள சூழலில் நமது கட்டுரையாளரது பதிலும் மொட்டையாக நிற்கிறது.

இந்த இடத்தில் அவர் ' எத்தைகைய விடுதலை?' என்ற அக்கறையான கேள்வியை எழுப்பியிருப்பாரேயானால் தொடர்ந்து நிலவுவது எத்தகைய அடிமைத்தனம்? என்ற விசயத்திற்குள் சென்று அடுத்து அடிமைப்படுத்தப்படுவதற்கும் ஆதிக்கம் செய்வதற்கும் அடிப்படையாக விளங்கும், பொருளாதார பலம், உற்பத்தி முறை வேறுபாடு போன்றவைபற்றியெல்லாம் சிந்திக்க வேண்டியிருக்கும்.

இந்த சிந்தனை தொடர்ச்சியின் வளர்ச்சியில் நம்மீது ஆதிக்கம் செலுத்தியவர்களது பொருளாதார கட்டமைப்பின் வேறுபாடு. அதாவது கன்னடர், மராட்டியர், அன்று மேற்கொண்டிருந்த உற்பத்திஉறவு முறைக்கும் டச்சு, பிரெஞ்சு, பிரிட்டிஷார் மேற்கொண்டிருந்த உற்பத்திஉறவு முறைக்கும் இடையிலான வேறுபாடு என்ன?

கன்னட மன்னரும், மராட்டிய மன்னரும் நம் மன்னர் மீது படை எடுத்ததற்கு என்ன காரணம்? (ஆங்கிலேயர் இங்கு படைஎடுத்து வரவில்லை என்ற சாதாரண உண்மைகூட புரிந்து கொள்ளப்படவில்லை)

படிப்பகம்

www.padippakam.com

ஆங்கிலேய வணிகக் கம்பெனியினர் இங்கு வந்ததற்கு என்ன காரணம்.?

இவ்வாறு யோசித்திருந்தால் அடுத்து விளைவுபற்றி யோசித்திருக்க முடியும். கன்னட, மராட்டியர் ஆட்சிகாலத்தின் விளைவுகள் என்ன? ஆனால் ஆங்கிலேயர் (இந்த இடத்தில் கட்டுரையாளர் ஏகாதிபத்தியம் என்று குறிப்பிடாததும் இன அடிப்படையில் விழிப்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்). ஆட்சியில் நடந்த மாற்றங்கள் என்ன?.

(கட்டுரையாளரது கூற்றுப்படி ஆங்கிலேயர்(நேரில்) இன்று ஆட்சியில் இல்லை. பி.ஜே.பி. ஆட்சி எனவே இந்தி திணிப்பு. பின் எப்படி ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்துகிறது என்ற கேள்விக்கும் பதில் இல்லை.

ஒன்று புலனாகிறது. அவர் ' மொழிகலப்பு' என்ற விசயமாக அனைத்தையும் காண்கிறார். கலப்பு என்பதற்கும் 'ஆதிக்கம்' என்பதற்குமான வேறுபாட்டை அவரால் அவதாணிக்க முடியவில்லை.

இன்றைய ஆங்கில ஆதிக்கத்தை ஆதிக்கமாக காணாமல் கலப்பாக காண்கிறார். ஆதிக்கமாக, பி.ஜே.பி ஆட்சியை ஒட்டி இந்தியை காண்கிறார்.)

இதன் தொடர்ச்சியில் சரி இந்த அயலார்களின் ஆதிக்கத்திற்கெல்லாம் முந்தி நமது (?!) மன்னர்கள் அதாவது தமிழ் மன்னர்கள் நம்மை வாழவைத்த போது (?!) (ஆண்டபோது) தமிழின் நிலையென்ன? வளர்ச்சியடைந்து கொண்டிருந்ததா?.

கட்டுரையாளரே மன்னர் மொழிவேறு, மக்கள் மொழிவேறு என்று சொல்லி நிறுத்துகிறார். ஆனால் வளர்ச்சியின்மைக்குக் காரணம் என்று வரும்போது மட்டும் பிற இன மன்னர்களது ஆதிக்கத்தை காரணமாக்குகிறார்.

இந்தப் பார்வைதான் இனவாதத்தை நோக்கி வளர்த்துச் செல்லக்கூடியது. இவர் சொல்லும் தமிழ் மன்னர் ஆட்சியில் தமிழின் நிலை என்ன?

www.padippakam.com

மக்களை அறியாமையில் வைத்திருப்பதன் மூலமாக மூடத்தனத்திலும், மத, இறை விதி நம்பிக்கையிலும் மூழ்கி இருக்கச் செய்வதன் மூலமாக தங்களது நிலவுடமை உற்பத்தி முறையையும், ஆட்சியையும் தொடர்ந்து நடத்த முடியும் என்ற திட்டத்தின் மூலமாக, மக்களை கல்வி பெறுவதிலிருந்து தடுத்து வைத்துள்ளனர். இந்த மன்னர்களும், அறிவு ஜீவிகளும அறிவுத் தமிழை அல்ல வளர்க்க பாடுபட்டது. அழகு தமிழை , அதாவது இலக்கிய தமிழை வளர்க்க (தமிழ்) சங்கம் வைத்து மயிர் பற்றிய மயிர் பிளக்கும் வாதம் நடத்தினார்கள்.

இங்கு முதலாளியம் [redacted]வளர்ந்திருந்தால் மக்களை மூடத்தனத்தில் இருந்து விடுவிக்க அவர்களது மொழியிலேயே பகுத்தறிவை ஊட்டி விஞ்ஞான, தொழில் நுட்ப கல்வியறிவு ஊட்டி வளர்த்து நிலவுடமை மன்னராட்சியை எதிர்த்துபோர் புரியத் தூண்டியிருக்கும். அதன் மூலம் ஐரோப்பிய நாடுகளைப்போல் தொழில் புரட்சி நடைபெற்று[redacted] இங்கு மொழியும் வளர்ந்திருக்கும்.

ஆனால் அவ்வாறு நடைபெறாத நிலவுடமைச் சா[redacted]திய சமுகத்தில்தான் கன்னட மன்னர்களும், மராட்டிய மன்னர்களும் படையெடுத்து வந்தனர். அவர்களும் தமிழ் மன்னர்களைப் போன்றவர்களே. மொழி மட்டும்தான் மாறுபாடு. இவர்களது வருகை நிலவிய உற்பத்திமுறையில் மக்கள் வாழ்க்கையில் எவ்வித மாறுபாட்டையும் தோற்றுவிக்க வில்லை.
அடிப்படை

இதனை மார்க்ஸ் (இந்தியா பற்றிய தனது நூலில்) மன்னர்களுக்கிடைப்பட்ட போர்களின்போது மக்கள் வாழ்க்கையில் மாறுதல் ஏற்படாததை அசைவற்ற கிராமச் சமுகங்கள் என்று வருணித்துள்ளார். இந்த மன்னர் படை ① நோக்கியதாக மட்டுமில்லை. மாறாக ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒருவர் பிறர் மீது படையெடுத்து வந்துள்ளனர்.

[redacted] தமிழ் பாண்டியர்கள் தெற்கே இலங்கை முதல் படையெடுத்துச் சென்றுள்ளனர். வடக்கே இமயம் வரைகூட படையெடுத்துச் சென்றுள்ளனர். இதனைக்கான எது தடையாக இருந்தது. தமிழர் வீரம் பற்றிய பெருமையா?

① எழுப்பு தமிழகம்.



படிப்பகம்

www.padippakam.com

ஒத்த உற்பத்தி முறை, பொருளாதார வளர்ச்சியின் ஒத்த நிலை, போர் என்பதே கொள்ளையடித்துச் செல்வதற்க்காக என்ற காரணங்களினால் தான் இந்த படைஎடுப்புகள் எல்லாம் ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியைப் போல் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை. இவர்களது காலங்களில் நிகழ்ந்த குடியேற்றங்களும் கூட பிற்காலத்தில் பிற இனத்தவர் இங்கு மொழிச் சிறுபான்மையினராக வாழவும் காலப் போக்கில் தமிழ் கற்று தமிழராக ~~சிறுபான்மையினராக வாழவும் காலப்போக்கில் தமிழ் கற்று தமிழராக~~ மாறிப் போவதற்குமே காரணமாய் அமைந்தன. ஆனால் ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சிக்காலமும், அதனைத் தொடர்ந்து இன்றுள்ள மறைமுக ஏகாதிபத்திய ஆட்சிகாலமும் அப்படிபட்டதல்ல.

இது அவர்களது உற்பத்தி பொருட்களை வாங்கி உபயோகிக்கும் சந்தையாக, அவர்களது உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களை, கனிவளங்களை அளிக்கும் சுரங்கங்களாக உழைப்பை விற்கும் கூலி அடிமைகளைக் கொண்ட சிறைக்கூடமாக அவர்களது ஆகாத பொருட்களைக் கொட்டி வைக்கும் குப்பைத் தொட்டிகளாக நமது தமிழகத்தை வைத்திருக்கின்றனர். மேலும் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே,

மொழி, சினிமா, கலை, இலக்கியம், என்று பலவடிவங்களிலும் தாக்குதல் தொடுத்துக் கொண்டுள்ளனர். இந்த வேறுபாட்டைக் காணாமல் இவர்களையும் நிலப்பிரப்புகளது ஆதிக்க நடவடிக்கைகளையும் ஒன்று படுத்துவது எப்படி சரி?.

தமிழகத்தின் மீது படை எடுத்திருந்தாலும் கூட கன்னட மன்னர்களும், மராட்டியர்களும் தமிழ் மன்னர்களைப் போலவே மக்களை அறிவு பெறவிடாமல் தடுத்துவைத்திருந்தன் காரணமாக்த்தான் தமிழ் நாட்டைப் போலவே இன்று அவர்களும் ஏகாதிபத்தியத்திற்கு அடிமையாக கன்னடத்தையும், மராட்டியத்தையும் ஆக்கிவைத்துள்ளனர்.

அதுபோலவே அவர்களது மொழியும் ஆங்கிலத்திற்கு அடிமையாகவே உள்ளது.

www.padippakam.com

சுயேச்சையான தொழில்நுட்ப அறிவையும், உற்பத்தியையும், முதலாளித்துவ சனநாயகத்தை கொண்டு மக்களுக்கு விஞ்ஞான அறிவையும் புகட்டி நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து வீழ்த்தாத எந்த சமூகமும் ஏகாதிபத்தியத்திற்கு சவாலாக நிற்க முடியாது.

அடுத்து மிகவும் மேலோட்டமாக, பி.ஜே.பி. மக்கள் போராட்டங்களை முறியடிக்க இந்தியை திணிக்க முயல்கிறது என்று கூறியுள்ளார். பி.ஜே.பி.யைப் பொறுத்தவரை இன்று இந்தியைவிட சமஸ்கிருதத்திற்குத்தான் மிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஏற்கனவே காங்கிரஸ் கட்சி ஆட்சியிலேயே இந்தி திணிக்கப்பட்டு பரப்பப்பட்டும் வந்துவிட்டது.

இந்திய ஆளும் வாக்கம் என்பது எந்த ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்தை மட்டும், மொழியை மட்டும் சேர்ந்தது அல்ல. பல்வேறு தேசிய இனங்களின் நிலப்பிரப்புத்துவ, தரகு (முதலாளிய) சக்திகளின் ஒட்டு மொத்தமாகும்.

இவர்கள் எல்லோருமே தங்களது மொழிவழி தேசிய இனத்தின் சுய வளர்ச்சியையோ, சனநாயகத்தையோ விரும்பாதவர்களும் ஏகாதிபத்திய கூட்டுடன் தரகு பொருள் உற்பத்தியில் ஈடுபட்டு அனைத்து தேசிய இனமக்களையும் சுரண்டி கொழுக்கும் மக்கள் விரோதிகள் தான்.

இவர்கள் தங்களது உற்பத்தி சுரண்டல் நடவடிக்கைக்கு இந்திய அளவில் உதவும் என்ற அடிப்படையிலேயே இந்தியை தேர்வு செய்து திணித்தனர். தற்போது அதற்கும் மேலாக பி.ஜே.பி இந்துத்துவ வாதிகள் இந்திய அளவிலான மிகவும் பிற்போக்கான நிலப்பிரப்புத்துவத்தின், சனாதனத்தின், வர்ணாசிரதர்மத்தின் அப்பட்டமான பிரதிநிதிகளாக இருப்பதால் 'தேவ பாசை' யான சமஸ்கிருதத்தை பரப்பவும், திணிக்கவும், வளர்க்கவும் முடிவு செய்துள்ளனர்.

[redacted]



படிப்பகம்

www.padippakam.com

தொகுப்பாக :

1. தமிழ் மொழி வளர்ச்சியின்மைக்கு தமிழினத்திற்கு வெளியில் இருந்து வந்த தடையை பிரதானமாகப் பார்ப்பது, உள்நாட்டில் நிலவும் சாதிய, நிலப்பிரபுத்துவ உறவு முறையை தடையாக பார்க்காதது.

2. வெளியில் இருந்து வந்த தடைகளையும் ஒன்று போல பார்ப்பது, கன்னடர், தெலுங்கர்கள், மலையாளி, வடவர், ஆங்கிலேயர் என இன அடிப்படையில் எதிரிகளாக பார்ப்பது.

என கட்டுரையாளரது இந்தப்பார்வை இன வெறிக்கு இட்டுச் செல்லும் அபாயம் கொண்டது. கூடவே தமிழ் மொழி வளர்ச்சி என்ற பெயரால் உயர்சாதித் தமிழையும் உயர்சாதிய நலனையும் உயர்த்திப் பிடிக்கும் வாய்ப்பம் கொண்டது.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு தமிழ் இனவிடுதலை எனும் போது அந்த விடுதலை அனைத்து தேசிய இனங்களையும் ஒடுக்கிக் கொண்டிருக்கும் நிலப்பிரபுத்துவ - தரகு சக்திகள், ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் ஒடுக்கு முறையில் இருந்து விடுதலை என்பதாக அமைய வேண்டும்.


அவ்வாறு அமையாமல் தமிழ்மொழியை அடையாளமாகக் கொண்டு விடுதலை பற்றிச் சிந்தித்தால் தமிழ்மொழி பேசிக்கொண்டே தமிழின மொழி வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் (உயர்) சாதி பிரபுத்துவ தரகுச் சக்திகள் இன்று கட்டமைக்கும் கன்னடர், தெலுங்கர், மலையாளி எதிர்ப்பு என்ற தேசிய இன வெறி வலையில் சிக்கி விடுவோம்.


படிப்பகம்

www.padippakam.com

தமிழர் நகைமுகன், கன்னடர் வட்டள் நாகராஜ், மராட்டிய பால்தாக்கரே போன்றோர் இந்த வகையான இனவாதத்தினைத்தான் முன்வைக்கின்றனர். இவர்கள் தங்களது இனத்தில் உள்ள ஒடுக்கப்பட்ட சாதியினைச் சேர்ந்த தலித்துகளுக்கும், உழைப்பாளர்களுக்கும், பெண்களுக்கும் எதிரிகளாக செயற்படுவதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.
இவர்கள் தவிர ஜனரஞ்சக அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் தங்களது இன நலனை முன்வைத்துப் பேசிக் கொண்டே ஏகாதிபத்திய தரகர்களாகவும், இந்துத்துவத்தை காப்பவர்களகவும் செயல்படுவதை காண்கின்றோம்.

ஆகவே மொழிவளர்ச்சிக்கான விடுதலை என்பது மொழியை அடையாளமாகக் கொண்டு சிந்திக்காமல். ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் (தலித்) பார்வையில் இருந்து சிந்திக்கப்பட்டு சாதி ஒழிப்பு, சனநாயகம் என்பதை நோக்கமாகக் கொண்டு கட்டமைக்கப்பட வேண்டும்.



www.padippakam.com

கோ. கேசவன் - இன்

'தலித் இலக்கியம் சில கட்டுரைகள்' நூலிலிருந்து

1

கலையாக்க முறையானது ஒரு கலைஞன் தனக்கு முந்தைய சமூகமும் தன் சமகால சமூகமும் தொகுத்து வைத்திருக்கும் அழகியல் சிறப்பு அம்சங்களைத் தன் தனித்துவ இயல்புகளோடு கலந்து கலைப் படிமங்களின் வழியே வெளிப்படுத்துவதாகும். கலையாக்க முறைகளில் ஒவ்வொன்றுமே குறிப்பிடத் தகுந்தது ஆகும். யதார்த்த வாழ்வில் எந்த அம்சங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது, அதை எந்தவிதத்தில் அழகுபூர்வமாகப் பொதுமைப்படுத்திக் கொள்வது, எந்த முறையில் வெளியிடுவது என்பன போன்ற அம்சங்களில் . கலையாக்க முறைகள் ஒவ்வொன்றும் தனித்தனியே வேறுபட்டுள்ளன. இத்தகைய கலையாக்க முறை ஒரு வரலாற்றுவகை என்பது முதன்மையாகும். ஒரு கலையாக்க முறையின் சில அம்சங்கள் அது உருவாவதற்கு முந்தைய காலக் கலைப் படைப்புகளில் கூட காணப்படலாமெனினும், படைப்பாக்கக் கோட்பாடுகளின் மொத்தம் என விளங்கப்படும் ஒருகலையாக்க முறையை உருவாக்கக் கூடிய சிறப்பு அம்சங்கள் ஒரு வரலாற்றுக் காலத்தோடு தொடர்பு கொண்டதாகும். இந்த விதத்தில் இயற்பண்பு நெறி, யதார்த்தவாத நெறி, விமரிசனா யதார்த்தவாத நெறி, சோசலிச யதார்த்தவாத நெறி எனப் பல கலையாக்க முறைகளை குறிப்பிடலாம். இவை போன்ற ஒவ்வொன்றும் தனிப் பண்புகளுடன் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரலாற்றுக் காலத்தோடு தொடர்பு கொண்டு விளங்குகின்றன.

2

யாதார்த்தவாதம் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்தில் திடப்பட்ட ஒரு படைப்பாக்க முறையாகும். நிலவுடைமை சமூகத்தினால் மூடிமறைக்கப்பட்டிருந்த சமூக யதார்த்தத்தை வெளிக்கொணர வேண்டிய தேவையை நிறைவேற்றும் ஒரு பகுதியாக இதன் உருவாக்கத்தைக் காணலாம். சமூகத்தில் காணப்படலாகும் அனைத்து நிகழ்வுப் போக்குகளையும் கண்டறிந்து அவற்றை நுட்பமாக வருணிப்பது மட்டுமின்றி, அவற்றை ஊடுருவி அவற்றின் சாராம்சமான போக்குகளை வெளிப்படுத்துவதாகவும் யதார்த்தவாதம் உள்ளது. இது நிகழ்வுகளின் காரணத்தையும் அவற்றுக்குரிய வரலாற்றுச் சூழமைவுகளையும் நிகழ்வுகளால் பாதிக்கப்படும் மனிதர்களின் உணர்வுகளையும் சித்தரிக்கும் படைப்பாக்க முறையாகும். மனிதனை மையமாகக் கொண்டு எழுந்த இந்த

படிப்பகம்

www.padippakam.com

புதுமைப் பதிப்பகம். 44-A, நன்மை தருவார் கோயில் தெரு.
மதுரை-1. பக்கங்கள்-52. விலை:ரூ. 15.00.

முறையில், மனித நேயம், மனிதனின் துன்ப துயரத்துக்கான அனுதாபம். மனித விடுதலை குறித்த கனவு ஆகியனவற்றைக் காணலாம். யதார்த்த வாதத்தில் வருணிக்கப்படும் விவரங்களின் உண்மைத்தன்மை மிகவும் முக்கியமானதாகும். அதோடு மட்டுமின்றி, வகை மாதிரியான சூழலில் வகை மாதிரியான பாத்திரப்படைப்பு இன்றியமையாததாகவும் உள்ளது.

முதலாளிய சமூகத்தின் தொடக்கத்தில் கற்பனாவாதமும் உயர்குலத்துக்கான விசுவாசம் மிக்க கும்பல்மனோநிலையும் தடைகளாக இருந்த தருணத்தில், அவற்றை முறியடித்து யதார்த்தத்தை வெளிக்கொணரவும் தனி மனிதனை மையப்படுத்தவும் இந்தக் கலையாக்க முறை பயன்பட்டது. இது எல்லாக் காலத்துக்கும் நிரந்தரமாக இருக்கக்கூடிய ஒன்றல்ல. இதன் கூறுகள் சில முதலாளிய சமூகத்துக்கு முன்னர் தோன்றிய கலைகளில் காணப்பட்டாலும், இது ஒரு கலையாக்க முறையாக முதலாளிய சமூகத்தின் எழுச்சிக் காலத்தில் உருவாயிற்று எனக் காண்பதே பொருத்தமாக இருக்கும். அதுமட்டுல்ல. யதார்த்தவாத கலையாக்க முறையிலும் அளவுரீதியிலான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே வந்தன. சேக்ஸ்பியர் படைப்புகளில் காணப்படலாகும் யதார்த்தவாதத்துக்கும் பால்சாக், ஆண்டன் செக்காவ், லியோ டால்ஸ்டாய் ஆகியோர் படைப்புகளில் காணப்படலாகும் யதார்த்தவாதத்துக்கும் இடையில் வேறுபாடு உள்ளது.

சேக்ஸ்பியரின் படைப்புகளில் தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் இடையிலான முரண்பாடுகளைக் கண்டறிந்து அவற்றை வெளிப்படுத்தும் போக்கு இருந்தது; ஆனால் பிந்தைய கலைஞர்களின் படைப்புகளில் இத்துடன் அந்த முரண்பாடுகளை தமக்குரிய சிந்தனை வளர்ச்சியோடு விமரிசனக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்வதையும் அந்த முரண்பாடுகளை அகற்ற வேண்டும் என்று ஆவேசம் கொண்டு கற்பனா ரீதியில் அவற்றுக்குத் தீர்வு சொல்ல முனைவதையும் காணலாம். இத்தகைய கலையாக்க முறையில் ஒடுக்கப்பட்டவர்கள் மீதான அனுதாபம் இருந்ததைக் காணலாமெனினும், இவர்கள் காலத்திய சமூக அமைப்பு, இத்தகைய கலைஞர்களின் சிந்தனை எல்லை ஆகியனவற்றின் காரணங்களினால் இத்தகைய கலையாக்கத்தில் உழைக்கும் வர்க்கச் சார்பு நிலைபாட்டை முழுமையாகக் காண முடிவதில்லை. இது யதார்த்தவாதக் கலையாக்க முறையின் எல்லையாகவும் உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை : நசிம்

# சமத்துவபுரம்

## காந்திய வஞ்சனைகள் ஓர் தொடர்கதை

புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக்கொண்ட கதையை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். அதை நடைமுறையில் நமது இந்திய ஆட்சியாளர்கள் வரலாற்றில் பல முறை செய்து காட்டி மக்களை ஏமாற்ற முயன்று தோற்றிருக்கின்றனர்.

இப்போது மீண்டும் ஒரு முறை அம் முயற்சி தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த முயற்சி ஏதோ கேலிக்கூத்தாக மேற்கொள்ளப்படுகிறது என்றோ அல்லது தனி நபரின் முட்டாள்தனமான செயல் என்றோ ஒதுக்கித்தள்ளமுடியாது.

மாறாக ஆண்டாண்டு காலமாக நிலவிவரும் சாதிய ஒடுக்குமுறை, தீண்டாமை போன்ற சனநாயகமற்ற நிலப்பிரபுத்துவ பண்பை மேலும் கட்டிக்காப்பதற்கான நவீன ஏமாற்று நடவடிக்கை என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

அந்த ஏமாற்றுதான் தமிழகத்தில் இன்று அரங்கேறி வரும் "சமத்துவபுரம்"

ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் முதலாளிய, நிலப்பிரபுத்துவ தனியுடமைக் கொடுங்கோலர்களை எதிர்த்து போராடி வீழ்த்தி மக்களின் அதிகாரம் ( பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்) படைத்தனர் அங்கிருந்த கம்யூனிஸ்ட்கள்.

ஆனால் நிலப்பிரபுத்துவ பிற்போக்காளர்களின் ஆதிக்கம், தனியுடமைச் சுரண்டல், பசி, பட்டினி, பாலியல் வன்முறை, திருடு, வஞ்சம், ஊழல் போன்ற அனைத்து மக்கள் விரோத அம்சங்களும் நிலவுவதுடன் அவை மேலும் மேலும் வளர்ந்து செல்லும்படியான திட்டங்களைப்போட்டு வரும் இந்திய ஆட்சியாளர்கள் இந்திய "ஒரு' சனநாயக சோசலிச குடியரசு' என்று கதையளந்தார்கள்.

இத்தகைய வரலாற்றுப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் தற்போது தமிழ்நாட்டில் சமத்துவபுரங்கள் என்ற பெயரால் புதிய ஏமாற்று வித்தயை துவக்கியுள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com

70 ஆண்டுகள் முன் ஒடுக்குமுறைக்கும், தீண்டாமைக் கொடுமைக்கும் எதிராக தலித் மக்கள் போராடிய போது மகாத்மா என்றழைக்கப்பட்ட திரு. காந்தி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்கத்துடன் ஆதிக்க சாதியினரிடம் இவ்வாறு கூறினார், " உயர் சாதியினரான நீங்கள் தாழ்த்தப்பட்ட மக்களை கீழானவர்களாக பார்க்காதீர்கள். உண்மையில் அவர்கள் ஹரிஜனங்கள் ( விஷ்ணுவின் புத்திரர்கள்) இறைவனின் பிள்ளைகள் " என விஷேச அந்தஸ்த்து வழங்கி புதிய வகை தீண்டாமையைப் புகுத்தினார். அதாவது எந்த வகையிலும் தலித்துகள் தங்களைப்போன்ற மனிதர்கள் அல்லர். ஏதோ ஒருவகையில் ஒதுக்கப்படவேண்டியவர்களே. தாழ்வாகச்சொல்லி ஒதுக்குவதற்குப்பதிலாக உயர்வாகச் சொல்லி ஒதுக்கி வைக்கும் வேலையை அன்று காந்தி செய்தார்.

இவ்வாறு செய்ததன் மூலம் தீண்டாமைக் கொடுமையை நவீனமுறையில் செயல்படுத்தி தலித்துகள் மனித சமூகத்துடன் இரண்டறக்கலக்கும் தகுதியில்லாதவர்கள் என்று நிலைநாட்டினார்.

ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களான நமது விருப்பம் இறைவனின் குழந்தைகளாக சமூகத்தில் வெளியே ஒதுங்கி நிற்க வேண்டும் என்பதல்ல. மனிதனுக்கும் மனுசிக்கும் பிறந்த 'உன்னைப்போல அவனைப்போல எட்டு சாணு உசரமுள்ள' மனிதன் என்ற அடிப்படையில் சமூகத்திற்குள் கலந்து நிற்கும் விருப்பமேயாகும்.

ஆனால் ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளான இந்திய ஆட்சியாளர்கள் சாதியக் கட்டுமானத்தை கட்டிக்காத்து மனிதர்களை மனிதர்களாக மதிக்காத தீண்டாமைக் கொடுமையை தொடர்ந்து தந்திரமாக நிலை நிறுத்துவதற்குப் பாடுபட்டு வருகின்றனர்.

சமீப காலத்தில் தமிழக தென் மாவட்டங்களில் நடைபெற்ற சாதிய ஒடுக்குமுறைக் கெதிரான போராட்டங்கள் மற்றும் மோதல்களை காரணம் காட்டி சாதிய கலவரங்கள் தடுப்பு நடவடிக்கை என்ற பெயரால் சமத்துவபுரங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

" சாதிச் சண்டைகளை ஒழித்து, சாதிமதபேதமற்ற சமத்துவ சமுதாயம் அமைத்து மக்களை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்ல தமிழ்நாட்டில் முதல் சமத்துவபுரம் உருவாக்கிவிட்டது" என்று சமத்துவ சமுதாயம் அமைக்க புதிய ( குறுக்கு ) வழியை கண்டுபிடித்துள்ளார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

மாவட்டத்தில் ஒன்று என்று ஊருக்கு வெளியே தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் கட்டப்படும் 100 வீடுகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 40, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 25, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு25, இதர வகுப்பினருக்கு 10 என்ற கணக்கில் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. இவர்கள் அனைவருக்குமான பொதுத்தகுதி சொந்த வீடற்ற ஏழைகள் என்பதே.

100 வீடுகளுடன் குடி நீர்தொட்டி, நூலகம், சுகாதார நிலையம், சமுதாயக்கூடம் (TV), பூங்கா என வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

இந்த வீடுகளில் குடியேற்றப்படுபவர்கள் 15 வருடகளுக்கு இவற்றை பிறருக்கு வாடகைக்கு விடவோ, விற்கவோகூடாது என நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

அனைத்துச் சாதிகளிலும் உள்ள ஏழைகளை சலுகைகளைக்காட்டி தங்களை தாங்கள் ஊருக்கு வெளியே ஒதுக்கிக்கொள்ளும் நிலையை ஏற்படுத்துகின்றனர்.

இந்தியர்வில் பிரிட்டிஷ் வருகைக்கு முன் இருந்த சாதியக் கட்டுமானத்தில் சாதிகளே வர்க்கமாக இருந்தது தாழ்த்தப்பட்ட மக்கள் ஏழைகளாகவும் இருந்தனர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவை ஆட்சி செய்ய ஆரம்பித்த பிறகு ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களின் காரணமாக அனைத்துச் சாதிகளிலும் இருந்து தனக்குச் சேவகம் செய்யும் கங்காணிகளை உருவாக்கிக்கொள்ளும் நோக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரிவிலிருந்து ஒருசிலருக்கும் கல்வியளித்து ஓரளவு பொருளாதார வளர்ச்சி பெறவும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

இதன் வளர்ச்சிப் போக்கில் இன்று அனைத்துச்சாதிகளிலும் வர்க்கங்கள் தோன்றியுள்ளன.

இங்கு சாதி வேறுபாடு, மதவேறுபாடு, பெரும்பான்மை - சிறுபான்மை, நிறவேறுபாடு, மொழி வேறுபாடு, உடல் ஊனம், நோய், பால் வேறுபாடு, பட்டிக்காடு என்று காரணங்களைக் காட்டி மேல் கீழ் என பிரித்துஅவமதிக்கும் உணர்வு கட்டமைக்கப்பட்டுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

இந்த வகையில் தான் பொருளாதாரத்தில் தாழ்ந்த, ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட அனைவரையும் ஒன்று திரட்டி அவர்களை ஊருக்கு வெளியே ஒதுக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நவீன தீண்டாமையை தாங்களே விரும்பி ஏற்று அதற்கு உட்பட்டு ஒதுங்கிவாழ போட்டி போடும் அளவிற்கு சலுகைகள் படம் பிடித்துக் கட்டப்படுகிறது.

இலவச வீடு, குடிதண்ணீர் வசதி, பால்மாடு லோன், சைக்கிள் கடை லோன், சுகாதார நிலையம் ....... இப்படிப்பல.

இந்த ஆசை வார்த்தைகளுக்கு பலியாவதற்கு ஏதுவாக வறுமையும், குடியிருக்க வீடில்லாமையும், எப்படியும் மானத்தை இழந்தாவது வசதிகளைப் பெறவேண்டும் என்ற விருப்பமும் துணைசெய்கிறது.

ஊருக்கு வெளியே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த தலித் மக்கள் சுடுகாடு, குடிதண்ணீர் போன்றவற்றிற்காக மேல்சாதியினருடன் மோதும் நிலை ஏற்பட்டபோது அம்மோதல் சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராக வளர்ந்து சாதி ஒழித்து சமூகத்துடன் ஒன்று கலக்கும் போராட்டமாக மாறிவிடக்கூடாது என்பதற்காக சேரிகளை காலனிகள் என்று மாற்றியும் தனிச்சுடுகாடு, தனிப்பாதை, தனிக்கிணறு, கான்கிரீட் கட்டிடம் என்று வசதிகளை ஏற்படுத்தி ஊருக்கு வெளியே நிலைபெறச் செய்தனர். அத்துடன் ஆதிக்கச்சக்திகளின் கிணறு, கோவில், பாதை போன்றவற்றை பாதுகாத்து சாதிய தூய்மையையும் காத்துக்கொள்ளச் செய்தனர்.

ஆகவே இங்கு கொடுக்கப்படும் சலுகைகள், செய்யப்படும் சீர்திருத்தங்கள் அனைத்தும் சாதிய ஒடுக்குமுறையைக் கட்டிக்காப்பதற்கும், ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் நோக்கிலேயே செய்யப்படுகின்றன. இதன் காரணமாகத்தான் என்னதான் கல்வி கற்று பொருளாதார வசதி அடைந்தாலும் தலித்துகளை கீழானவர்களாகப் பார்க்கும் 'உணர்வு' இன்றும் மேலோங்கி இருக்கிறது.

இதற்கு சமீபத்திய உதாரணம் சிவகங்கை மாவட்டம் கண்டதேவி தேரோட்டம்.

தாழ்த்தப்பட்டவர்கள் தேர்வடம் தொட்டு இழுக்கக் கூடாது என்று இப்பகுதியைச் சேர்ந்த நாட்டார்கள் முடிவெடுத்து தேரோட்டத்தை தடுத்து நிறுத்தி தங்களது சாதிய ஒடுக்கு முறை உணர்வையும் சனநாயக மறுப்பு குணத்தையும் வெளிக்காட்டிக்கொண்டனர்.


படிப்பகம்

www.padippakam.com

ஒருபுறம் நீதிமன்றம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இங்கு அனைத்து உரிமைகளும் இருக்கிறது என்று அறிவித்து தேர் இழுக்கலாம் என்று கூறுகிறது. மறுபுறம் அரசின் இன்னொரு கருவியான போலீசுத்துறை தாழ்த்தப்பட்டவர்கள் தேர் இழுக்க வந்தால், கூட்டம் கூட்டினால் கலவரம் வரும், சட்டம் ஒழுங்கு கெடும் என்று சொல்லி 144 தடையுத்தரவு பிறப்பித்து தேரோட்டத்தை நிறுத்துகிறது.

தலித்துகள் தேரோட்டம் நடக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். நாங்களும் தேர்வடம் தொட்டு இழுக்க வேண்டும் என்று கூறுகிறார்கள், பிறர் இழுக்கக் கூடாது என்று கூறவில்லை. ஆனால் ஆதிக்க வர்க்க நாட்டார்கள் பிறர் இழுக்க அனுமதிக்க மாட்டோம். நாங்கள் மட்டுமே இழுப்போம் என்று கூறுகிறார்கள். இவர்களது சாதிய தூய்மையை,ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக சாமியை நடுரோட்டில் நிறுத்திவிடுகிறார்கள். பின்பு அதற்காக விசேச பூஜை ஒன்று நடத்தி கடவுளையும் சரிக்கட்டி இனி அடுத்த வருடம்தான் தேரோட்டம் என்று அறிவிக்கிறார்கள்.

தேர் ஓடாவிட்டாலும் பரவாயில்லை தாழ்த்தப்பட்டவன் தேர்வடம் தொடுவதை மட்டும் அனுமதிக்க மாட்டோம் என்பதில் கறாராக இருக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சி எதைக்காட்டுகிறது. என்னதான் படித்து பட்டம் பெற்று பதவிக்கு வந்தாலும், தேர்தலில் நின்று M.L.A, M.P. என்று அதிகாரத்திற்கு வந்தாலும் சமுக நடைமுறையில் ஆதிக்கச்சக்திகளை பொருத்தவரை ' தாழ்த்தப்பட்டவன் ' - ' கீழானவன் ' என்ற சனநாயக விரோத உணர்வு மேலோங்கி இருப்பதைத்தானே காட்டுகிறது. இவர்களது நலனைக் கட்டிக்காப்பதாகத்தானே அரசு இருக்கிறது ?

இல்லை என்றால் கலவரம் என்று காரணம் காட்டி தேரோட்டத்தை தடுப்பானேன் ? தலித்துகள் கூடினால் கலவரம் வரும் என்றால் ஒரே ஒரு தலித்தை அதுவும் படித்த பட்டம் பெற்ற MLA டாக்டர் கிருஷ்ணசாமியை மட்டும் தேர்வடம் தொட அனுமதித்து தேரை நீங்களே இழுத்திருக்கலாமே மற்றபிற தலித்துகள் எல்லைக்கு அப்பால் நின்றிருப்பார்கள் நீங்கள் சொல்லும் கலவரமும் தடுக்கப்படும். ஏன் அவ்வாறு செய்யவில்லை ? ஏனென்றால் இங்கு அரசின் கடமை ஆளும் ஆதிக்கச்சக்திகளின் நலனையும் விருப்பத்தையும் காப்பதுதானே தவிர

படிப்பகம்

www.padippakam.com

தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை பாதுகாப்பதில்லை. ஏனென்றால் நிலவுகின்ற அரசு போடுகின்ற சனநாயக வேசமெல்லாம் அதன் சனநாயக மறுப்பை மறைப்பதற்கான முகமூடியேயாகும்.

இவ்வாறு சமூகத்தில் எவ்வித உரிமையும் இன்றி ஒடுக்கப்படும் மக்களை அவர்களே விரும்பி ஊருக்கு வெளியே ஒதுங்கி போவதற்கு சமத்துவபுரங்களை தோற்றுவித்துள்ளனர் கூடவே பிறசாதிகளிலும் பொருளாதார வாழ்நிலையில் தாழ்ந்தும் அதனால் இழிநிலைக்குத் தள்ளப்பட்டும் உள்ள ஒடுக்கப்பட்டவர்களையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக புதிய வகை தீண்டாமைச் சாதியை உருவாக்கி ஊருக்கு வெளியே தள்ளியுள்ளனர்.

பொருளாதாரத்திலும் அரசியல் ஆதிக்கத்திலும் சாதிய ஒடுக்கு முறை பண்பிலும் மேலாதிக்கம் செலுத்துகின்ற சனநாயகப் பண்பற்ற ஆதிக்க சக்திகள் சமூகத்தின் மையத்தில் நிற்கின்றனர் அவர்களைச் சுற்றி எல்லாச் சாதிகளிலும் இருந்து தேர்வு செய்யப்பட்ட ஆளும்வர்க்க சேவகர்கள், கங்காணிகள், இடைத்தரகர்களாக பாதுகாப்பு வளையமாக நிற்கின்றனர் சமூகத்தின் ஓரத்தில் நிற்கும் ஏழைகள், கூலி உழைப்பாளர்கள் மேலும் மேலும வெளியே தள்ளப்பட்டு இழிவுபடுத்தப்படுகிறார்கள்.

இந்திய ஆளும் ஆதிக்கவர்க்கம் எல்லா நேரங்களிலும் ஒரே மாதிரியாக ஒடுக்கமுறையை மேற்கோள்வதில்லை. நேரடி ஆயுத ஒடுக்குமுறைக்குப் பதிலாக சலுகையளிப்பதன் மூலமாகவும் ஒடுக்கப்பட்ட மக்களை பிளவுபடுத்தி கங்காணிகளை உருவாக்கி அவர்களைக் கொண்டே சாதிய ஒடுக்கு முறையை, தீண்டாமையை தொடர்ந்து நடத்திச் செல்வதற்கு முயற்சிக்கிறது.

இந்த கங்காணிகள் தாங்கள் பெற்றுள்ள கல்வியையும் அடைந்துள்ள போருளாதார நலன்களையும் கொண்டு தாங்கள் சம உரிமை அடைந்துவிட்டதாகக் கருதுவார்களேயானால் அவர்கள் கண்டதேவி தேரோட்டத்தை மீண்டும் ஒருமுறை நினைத்துப்பார்க்கட்டும்.

இவர்கள் பெற்றுள்ள சலுகைகள் தங்களது மக்களை ஆதிக்கவர்க்கம் ஆள்வதற்கும், சுரண்டுவதற்கும் தாங்கள் செய்த சேவைக்கு கிடைத்த எலும்புத்துண்டுகளேயாகும்.


படிப்பகம்

www.padippakam.com

இதுவரை இந்தியாவில் நிகழ்ந்துவந்துள்ள மாறுதல்கள் அனைத்தும் கூட இந்திய சனநாயகமற்ற சாதிய ஒடுக்குமுறை உறவை தொடர்ந்து கட்டிக்காத்தே வருகிறது. அத்தகைய கட்டிக்காப்பின் ஓர் செயலாகத்தான் சமத்துவபுரங்களும் தோற்றுவிக்கப்படுகின்றன.

இத்தகைய ஏமாற்றுத் திட்டங்களைக் கண்டு ஏமாந்துவிடாமல், தங்களது மக்களுக்கு துரோகம் செய்யாமல், தலித்துகள் மற்றும் புதிய தலித்துகள் சமுகத்தில் இருந்து மேலும் மேலும் ஒதுக்கப்படுவதற்கு எதிராக சமுகத்துடன் இரண்டறக் கலப்பதற்கான 'மனிதர்களை மனிதர்களாக' மதிக்கும் சனநாயக சமுகத்திற்கு எதிரான சனநாயக மறுப்பாளர்களை எதிர்த்த போராட்டமே இன்றைய தேவை. இதனை நிறைவு செய்வதே படித்த கல்விகற்ற தலித்துகளது கடமை.


படிப்பகம்

www.padippakam.com

# உழைப்பு – தொழிலாளி – ஒரு கோட்பாட்டு ரீதியான விளக்கத்தினை நோக்கி ...
## -: பாட்டாளி -.

இந்தப் பூமியில் பல்வேறு உயிரிகள் வாழ்ந்து வருகின்றன. ஒரு செல் உயிரியிலிருந்து ஆறறிவு பெற்ற மனித உயிரி வரை. இந்தப் பல்வேறு உயிரினங்களிலிருந்து மனிதனைப் பிரிப்பது எது? உழைப்பு. ஆம் இந்த உழைப்பு தான் மனிதனை இதர ஜீவராசிகளிலிருந்து பிரிக்கிறது. எப்படி? இந்தப் பூமியில் மனிதனைத் தவிர்த்த உயிரிகள் எல்லாம் பூமியை அப்படியே நகர்ந்து வருகின்றன. ஆனால் மனிதன் மட்டும்தான் தனது உழைப்புப் போக்கினால்இந்தப் பூமியைத் தனக்கானதாக மாற்றியமைத்துக் கொள்கிறான். தனக்கானதாக தகவமைத்துக் கொள்கிறான். ஆதியில் குரங்கு நிலையிலிருந்தவன் குனிந்தபடியே நகர்ந்து கொண்டிருநதவன் என்று நிமிரத் தொடங்கினானோ அன்றே மனித குலமும் நிமிரத் துவங்கியது. நிமிரத் துவங்கிய மனிதன் அடுத்த கட்டமாய் எப்போது கைகளைப் பயன்படுத்தத் துவங்கினானோ அப்போது உழைப்பு தோன்றியது. அதன் அடுத்தடுத்த பரிணாம நகர்வில் முழுமை பெற்ற மனிதன் இன்று பூமியை மட்டுமல்ல பால்வீதிகளையும், விசும்புகளையும் விசாரித்துக் கொண்டிருக்கிறான்.

முதலில் உழைப்பு என்றால் என்ன? என்று பார்ப்போம். உழைப்பு என்பது ஒரு மனிதனிடமுள்ள மூளையின் ஆற்றல்கள், உடலின் ஆற்றல்கள் இந்த இரண்டையும் இணைத்து ஒன்றின் மீது குவிக்கும் ஆற்றல்களின் ஒட்டுமொத்தம் என்று புரிந்து கொள்ள வேண்டும். இந்த உழைப்பு எல்லா மனிதர்களுக்கும் அடிப்படையில் பொதுலானது. இப்படி நாம் சொல்லிச் செல்கிறபோது உங்களுக்கு ஒரு கேள்வி எழலாம். எல்லோரும் ஒரே மாதிரியாகவா உழைக்கிறார்கள் என்று? நாம் மேலே சொன்னது உழைப்பு என்பதின் அடிப்படைக் கோட்பாடு. இந்த உழைப்பு என்பது உழைப்புத் திறன் உழைப்புச் சக்தி என்று இரண்டாய் வேறுபடும்.

ஒரு மனிதனிடம் வேலை செய்வதற்கான கரங்கள், உடற்கூறு ரீதியிலும், ஆன்மீக ரீதியிலும் உள்ள திறமை, ஞானம், லாவகம், இவைகள்தான் உழைப்புத் திறன் என்பன. அதாவது ஒரு மனிதன் உழைப்பதற்குத் தேவையானவை இந்தக் கூறுகள். இந்த உடற்கூறு ரீதியிலான, ஆன்மீக ரீதியிலான திறமைகளின் பயனாய் ஒவ்வொரு மனிதனாலும் உழைக்க முடியும். குறிப்பிட்ட பொருட்களைத் தயாரிக்க முடியும். இந்த உழைப்புத்திறன்தான் ஆளுக்கு ஆள் வேறுபடும்.

உழைப்புச் சக்தி என்பது குறிப்பிட்ட பொருளைத் தயாரிப்பதற்கு அவனிடம் உள்ள உழைப்புத் திறன்தான் அவனுடைய உழைப்புச் சக்தி ஆகும். இங்கு நுட்பமாக ஒன்றை மனங்கோள்ள வேண்டும். உழைப்புத் திறன்தான் ஆளாளுக்கு வேறுபடும். உழைப்புச் சக்தி என்பது எல்லோருக்கும் பொது.


படிப்பகம்

www.padippakam.com

உற்பத்திப் போக்கில் உழைப்புச் சக்தி தையல் இயந்திரம் என்ற உற்பத்தி சாதனத்துடன் இணைந்து அவற்றை இயக்குகிறது. குறிப்பிட்ட பொருட்களைப் படைக்கிறது. ஆக ஒரு மனிதனிடம் உள்ள உழைப்புத் திறனால் ஆன உழைப்புச் சக்தி உற்பத்தி செய்வதற்கான சாதனங்களுடன் இணையும் போது விளைவதே உற்பத்தி என்பதாகும். மனிதனுடைய உழைப்பு இயந்திரம் அல்லது இயந்திரம் அல்லாத ஏதோ ஒரு கருவியின் மீது இணைந்து இயங்குகிற போது உற்பத்தி தோன்றுகிறது.

உழைப்பு பற்றி உழைப்புத் திறன் பற்றி உழைப்புச் சக்தி பற்றி உற்பத்தி பற்றி கோட்பாட்டு ரீதியான தேடல்களின் நீட்சியாக தொழிலாளி பற்றிய நம் சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்வோம். அடிப்படையில் எல்லா மனிதர்களும் உழைப்பினை தத்தம் அளவிலே கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அத்துணை பேரும் உழைப்பாளிகள் அல்லது தோழிலாளிகள் என்று அழைக்கப்படுவதில்லையே. ஏன்? அப்படியானால் தொழிலாளி என்பவன் யார்? தொழிலாளி என்ற பிரிவு எப்படி தனியானது? சமூகம் பொதுமையிலிருந்து எப்படித் துண்டிக்கப்பட்டது? நம் சிந்தனைகளின் நீட்சியை இது நோக்கி நீட்டிச் செல்கிறபோது ...

உற்பத்திக்கு என்ன என்ன வேண்டும். உழைப்புச் சக்தி வேண்டும். உற்பத்திச் சாதனம் வேண்டும் என்று பார்த்தோம். ஒரு மனிதனிடம் அவனுக்குச் சொந்தமான உழைப்புச் சக்தி இருக்கிறது. உற்பத்தி சாதனம் அது இல்லையே. பிறகு எப்படி உற்பத்தி வரும். இந்த இடத்தில்தான் நம் பார்வைகளை ஆழமாகக் குவிக்க வேண்டியிருக்கிறது. என்னிடம் உழைப்பு இருக்கிறது . ஆனால் அதைச் செலுத்த உற்பத்தி சாதனம் இல்லை. ஆகவே, யார் உற்பத்தி சாதனத்தை உடைமையாக வைத்திருக்கிறார்களோ அவர்களிடம் சென்று என் உழைப்புச் சக்தியை விற்கிறேன். அப்படி என் உழைப்புச் சக்தியை விற்பதன் மூலம் நான் இழக்கிற அல்லது செலவழிக்கிற உற்பத்தி சக்திக்கு கூலியைப் பெற்றுக் கொள்கிறேன். இதனால் என் மூலமாயும் உற்பத்தி சாதனம் மூலமாயும் விளைகிற இறுதி விளைவான உற்பத்தியின் பலனிலிருந்து உரிமைகள் ஏதுமற்றவனாக நான் அந்நியப்படுத்தப்படுகின்றேன். இப்படியாக என் உழைப்புச் சக்தியை விற்று அதற்கு கூலியைப் பெறுகிற ஒரு தனி பிரிவானேன். அந்தப் பிரிவுதான் எல்லோருக்கும் பொதுவான உழைப்புச் சக்தி என்பது வேறு. உழைப்பு என்பது வேறு. உழைப்புச் சக்தி என்பது உழைப்பதற்கான திறமை என்றால் உழைப்பு என்பது அந்த உழைப்புச் சக்தியைச் செலவழிப்பதாகும். உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் இதை உற்பத்தி நோக்கத்தோடு பயன்படுத்துவதாகும். உதாரணமாக ஒரு தையற்காரனின் உழைப்புச் சக்தி என்பது ஆடையைத் தைக்க அவனுக்குள்ள திறமை என்றால் தையற்காரனின் உழைப்பு என்பதோ ஆடையினைத் தைப்பதைக் குறிக்கும்.


படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளிகள் என்பது. அதாவது இப்படி எளிமைப்படுத்திக் கொள்ளலாம். யாரிடம் உழைப்புச் சக்தி மட்டும் இருந்து உற்பத்தி சாதனங்கள் இல்லாமல் இருக்கிறதோ அந்த ஒருவர்தான் தொழிலாளி.

உழைப்பு பற்றியும் உற்பத்தி பற்றியும் தொழிலாளி என்ற பிரிவு எப்படி ஏற்பட்டது என்றெல்லாம் பார்த்த நாம் இங்கு சற்று நிறுத்திக் கொண்டு ஒரு முக்கியமான கேள்வி ஒன்றை எழுப்பிக் கொண்டு அதன் மீது நம் சிந்தனைகளைக் குவிப்பதன் மூலம் அடுத்த கட்டத்திற்கு நகரலாம்.

இன்றைய சூழலில் ஒருவரிடம் போய் உங்கள் முன்னேற்றத்திற்கு என்ன காரணம்? என்று கேளுங்கள். அவர் என்னுடைய கடின உழைப்புதான் காரணம் என்பார். இச்சமூகத்தில் முன்னேறியவர் என்றால் நிலம் நீச்சு, மாடி மனை, பங்களா கார், சொகுசு வாழ்க்கை, நிறையப் பணம் என பொருளுடமை கொண்ட ஒருவரையே, பணத்தைக் குவித்து வைத்திருக்கும் ஒருவரையே அர்த்தப்படுத்துகிறது.

எல்லாம் காசு பணம் என்னும் உறவுகளுக்குள்ளேயே குறுகிப் போன உலகம் இது. அவர் ஆரம்பத்தில் சாதாரணமானவராகத் தான் இருந்தார். ஆனால் இன்று படிப்படியாய் முன்னேறி பெரிய பணக்காரனாயிட்டார் என்று கற்பிதம் கொண்டிருக்கிற உலகம் இது. அப்படிப்பட்ட ஒருவரிடம் போய்க் கேளுங்கள். என் கடின உழைப்புதான் என் முன்னேற்றத்திற்குக் காரணம் என்பர்.

இங்கு நாம் சற்று நிதானமாக யோசித்தோமானால் ஒரு தொழிலாளியின் மேல், மேலும் மேலும் சுமத்தப்படும் வேலைப்பளுவினால் அவன் நேற்றை விட இன்று கடினமாக உழைக்கிறான். போன வருடத்தை விட இந்த வருடம் அவனது வேலைப் பளு மிக மிக அதிகரித்திருக்கிறது. உதாரணமாக 4 தறிகள் இயக்கும் ஒரு தொழிலாளி இன்று 8 தறிகள் இயக்குகிறான். 4 ஜாப் செய்த ஒருவர் இன்று 8 ஜாப்களை செய்ய கடினமாக உழைக்கிறார். ஆனால் அந்தத் தொழிலாளி முன்னேறி இருக்கிறானா? அவனது வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதா? அவனது வாங்கும் சக்தி அதிகரித்திருக்கிறதா? இல்லையே. மேலும் மேலுமாய் வறுமைக்குள்தானே உழல்கிறான். அப்படியானால் முன்னேற்றத்திற்கு காரணமான கடின உழைப்பு என்பது பொய்யா? என்ன இந்த முரண்பாடு? எப்படி இந்த முரண்பாடு?


படிப்பகம்

www.padippakam.com

சாராம்சத்தில் உற்பத்தி சாதனங்கள் ஏதுமற்ற பாட்டாளிகள் தமது உழைப்பு சக்தியை உடமையாளனுக்கு விற்பதன் மூலம் அதற்கு கூலியைப் பெற்றுக் கொள்கிறார்கள். இந்தக் கூலி அல்லது ஊதியம் என்பதில் தான் இருக்கிறது. அந்த முரன்பாடு உண்மையில் ஊதியம் என்பதே மிகப் பெரிய மோசடி ஊதியத்தில் " பெயரளவு ஊதியம் " , " உண்மையான ஊதியம் " என்று இரண்டு உண்டு. நிலவுகிற முதலாளியச் சூழலில் தனது உழைப்பை விற்கிற எந்த ஒருவனாலும் ஊதியத்தைப் பெறமுடியாது.

மாறாக அவன் பெற்றுக்கொள்வது என்னவோ பெயரளவு ஊதியத்தைத்தான். சற்று விளக்குவோம் ஒரு தொழிலாளியும் உற்பத்தி சாதனமும் இணைகிற போது விளைகின்ற உற்பத்தியின் மதிப்பில் இருவரின் கூட்டும் சரி பாதியாக இணைந்திருக்கிறது. அதனால் கிடைக்கிற மதிப்பில் இருவருக்கும் சம பங்கு உண்டல்லவா.

அப்படி சமபங்காக பகிர்ந்து கொள்வது தான் உண்மையான ஊதியம். மாறாக ஒரு முதலாளி உற்பத்தியின் பலனை சரிபாதியாகப் பிரித்துக் கொள்ளாமல் பெருமளவு தான் அபகரித்துக் கொண்டு ஒரு சிறு பகுதியை கூலியென்று பணமாகத் தருகிறான். இந்தச் சிறு பகுதி பண வடிவமே பெயரளவு ஊதியம் என்பதாகும்.

ஆக உழைப்பின் பலனை பெருமளவு சுரண்டக் கொடுத்துவிட்டு ஒரு சிறு பகுதியை ஊதியமாகப் பெற்றுக் கொள்ளும்போது எப்படி வரும் வளவாழ்வு? அதேசமயம் முதலாளியின் பெருமளவுச் சுரண்டலால் முதலாளியின் மூலதனம் பெருகி மூலதனத்திரட்சியாகி அந்தப் பெருகிய மூலதனத்தை மீண்டும் உற்பத்தியில் ஈடுபடுத்தி விரிவாக்கம் செய்து கொண்டு அதே தொழிலாளியை மேலும் மேலுமாய் கசக்கிப்பிழிந்து ஒட்ட ஒட்டச் சுரண்டிக் கொண்டு அவன் முன்னேறவும், இவன் மேலும் மேலும் பள்ளத்தில் படுபாதாளத்தில் வீழவுமாய் - இது ஒரு சக்கர சுழற்சி.

சரி ! இதற்கு விடிவு தான் என்ன? நிலவுகிற முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவத்தை வேரோடும் வேரடிமண்ணோடும் வீழ்த்தி உழைப்பவன் கையில் என்று இந்த உலகம் உருளப் போகிறதோ அந்தப் பொதுவுடமையே விடிவு.

படிப்பகம்

www.padippakam.com

தங்களது கருத்துக்கள் / விமர்சனங்கள் / கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன

**சந்தா**

**தனி இதழ்** 8.00

**ஆண்டுக்கு** 50.00 **(ஆறு இதழ்கள்)**

**அரையாண்டு** 25. 00 **(மூன்று இதழ்கள்)**

**நூல் விமர்சனம் பகுதிக்கு 1 பிரதி அனுப்பவேண்டும்**

*வாசிக்கும் தோழர்களின் பங்களிப்பினைக் கொண்டு மட்டுமே பகிர்வு வெளியிடப்படுகிறது. எனவே தொடர்ச்சியாக இதழ் பெற்று வருகிறவர்கள் தங்களது பங்களிப்பாக இதழுக்கான தொகை அல்லது சந்தா அளித்து உதவ வேண்டுகின்றோம்.*

பெறுநர்.

*தொடர்புக்கு*
*குமரன் தாஸ்,*
*சமூக விஞ்ஞான பயிலகம்,*
No. 153, *சூர்ய மூர்த்தி* [redacted]*காம்பௌண்ட்,*
*புதுச்சந்தை (வடக்கு),*
*காரைக்குடி - 630001.*

## படியுங்கள்

*புதிய தடம்*
*(பயிலகத்தின் இலக்கிய இதழ்),*
*மேகவண்ணன்,*
*28B லெட்சுமண தீர்த்தம் தெரு,*
*இராமேசுவரம் - 623 526.*

படிப்பகம்